மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. தமிழ் படித்த காரணத்தினலே, பி.டி. படிப்பதற்கு வாய்ப்பு தரப்படவில்லை என்பது சரியல்ல. பலபேர் விண்ணப்பம் செய்கிருர்கள். விண்ணப்பம் செய்கிறவர்களிலே பலபேருக்கு பல வகைகளிலே நாம் இடம் ஒதுக்கித் தரவேண்டியவர்களாக இருக்கிருேம். அந்த வகையில் ஏற்கெனவே வேலை பார்க்கிறவர்கள் பி.ஏ. படித்துவிட்டு இருப்பவர்களுக்கு ட்ரெயினிங்குக்காக ஒரு 80 சதவிகிதம் ஒதுக்கி வைக்க வேண்டியிருக்கிறது. புதிதாக வருகிறவர்களுக்கு 20 சதவிகிதம். அதிலே வருகிறவர்களில் முதலிலே தேறியவர்கள், இரண்டாவதாகத் தேறியவர்கள் என்ற அளவுக்குப் பாகுபாடு செய்யப்படுகின்றதே தவிர, தமிழிலே படித்தவர்கள் என்பதற்காக எதுவும் மேற்கொள்ளப் படுவதில்லை.

Amenities for the Party Whips

* 318 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to provide suitable accommodation and telephone connections in the Legislature premises to the Whips of all recognised opposition parties as per the recommendations of the Whips' Conference held at Bhopal in November, 1972; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

கட்சிக் கொறடாக்களுக்கு வசதிகள்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972, நவம்பரில், போபாலில் நடைபெற்ற கட்சிக் கொறடாக்கள் மாநாட்டின் பரிவுரைகளுக்கேற்ப, சட்ட மன்ற வளவுகளுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து எதிர்க்கட்சிகளின் கொறடாக்களுக்கும் தக்க இடவசதியும் தொலைபேசி இணைப்புகளும் செய்து தரும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் மேல் எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

1973 மார்ச் 31]

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, மாநாட்டில் செய்யப் பட்ட முக்கிய பரிந்துரைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனுடைய பரிந்துரைகள் முழுவதும் தெரியவில்லை. இந்த ஒரு பரிந்துரையைப் பொறுத்த மட்டும், அரசு பரிசீலித்து சட்டமன்றப் பேரவையில், மேலவையில் உள்ள அரசுக் கொறடாக்களுக்கு 1970 ஜூனில் கீழ்க்கண்ட வசதிகள் செய்து கொடுத்தது. திங்கள் ஒன்றுக்கு வீட்டு வாடகைப்படியாக ரூ. 100, திங்கள் ஒன்றுக்கு வாகனப்படியாக ரூ. 100, அரசுச் செலவில் கார் ஓட்டி, ஒரு கார், குறித்த காலத்திற்கு ஒரு முறை அதற்குச் செப்பனிடுவது அல்லது பழுது பார்ப்பது, கடைநிலை பணியாளர் ஒருவர், தொலை பேசி வசதி, தலைமைச் செயலகத்திலே ஒரு அறை, அவர்கள் இருப்பிடத் திற்கு இலவசமாகத் தொலைபேசி வசதி, ரூ. 250 சம்பளத்தோடு, மேற்சொன்ன வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எதிர்க் கட்சிக் கொறடாக்களுக்குத் தொலைபேசி முதலிய வசதி செய்து கொடுப் பதற்கு அரசு பரிசீலித்திருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆளும் கட்சிக் கொறடாக்களுக்கு இருப்பதைப் போல, அவர் களுக்கு வாகனம், ஓட்டுநர், வீட்டு வசதிகள் இவைகளையும் செய்து கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பரிசீலனை என்றால், அதுதான் பரிசீலனை. எதிர்க் கட்சி என்று வருகின்றபோது, அந்த இலக்கணத்திற்குட்பட்டு வருகின்ற எதிர்க் கட்சிக் கொறடாக்களுக்குத் தரவேண்டும் என்பதுதான் அந்தத் தீர்மானம். ஆக, அதுதான் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்த மாநாட்டில் நம்முடைய மேலவைக் கொறடா அவர்கள் கலந்து கொண்டார்களா? கலந்துகொள்ளாவிட்டால் என்ன காரணத்தால் கலந்துகொள்ளவில்லை? நம்முடைய மேலவைக் கொறடாவுக்கு ஒரு தனி நேர்முக உதவியாளர் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மேலவைக் கொறடா இங்கே வீற்றிருந்து, அவரே எதையும் கேட்காம லிருக்கும்போது, உறுப்பினர் அவருக்காகக் கேட்பது முறையல்ல. இப்போதுதான் பல்வேறு வசதிகளைச் செய்துகொண்டுவருகிறோம்.

ஏற்கெனவே இந்த வசதிகள் எதுவுமே இல்லாதிருந்த கொறடாக்கள் இவ்வளவு வசதிகள் பெறுவதில் ஒரு ஆண்டுக் காலத்திற்காவது மகிழ்ந்துகொண்டிருக்கலாம். பிறகு இதுபற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, போபாலில் நடந்ததைப் போன்று அகில இந்திய சட்டசபைகளின் கொறடாக்களின் மாநாடு ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. அதற்கு எல்லா சட்டசபை களிலும் உள்ள எல்லாக் கட்சிகளின் கொறடாக்களும் அழைக்கப் படுகிறார்கள். அப்படியிருக்க நமது மாநிலத்திலிருந்து ஆளும் கட்சியின் கொறடாக்கள் மட்டும் அனுப்பப்படுகிறார்கள். எல்லா மாநிலங்களிலிருந்தும் அனைத்துக் கட்சிக் கொறடாக்களையும் அனுப்பி வைக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே எதிர்க் கட்சிகளுடைய கொறடாக்களையும் அனுப்புவதற்கு இனிமேல் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளும் கட்சிக் கொறடாக்களிலே கூட சட்டமன்றப் பேரவை கொறடா தான் அனுப்பி வைக்கப்பட்டார். அடுத்து நடைபெறுகிற மாநாட்டிற்குக் கொறடாக்கள் இந்த விண்ணப்பத்தைத் தருவார்களே யானால், அதுபற்றிக் கவனிக்கலாம்.

Virus Disease in Banana Plantations

* 319 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any virus infection was traced in Banana plantations in the State during October–November, 1972; and

(b) if so, the action taken thereon?

வாழைத் தோட்டங்களில் வைரஸ் நோய்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், 1972-ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் திங்களில், வாழைத் தோட்டங்களில், வைரஸ் நோய் ஏதும் பரவியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?